**Sub Court, Eraniel**

O.S. No.99/2023
Date: 02.02.2026.
வா.சா.2 - திருமதி.நெல்சி
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு வழக்கு சொத்து எங்கு உள்ளது என்ற விபரம் தெரியும், நான் வழக்கு சொத்தை பார்வையிட்டுள்ளேன். பிரதிவாதி ஜெயசீலன் மற்றும் அவரின் அம்மா லில்லி கிளாடிஸ் சை எனக்கு தெரியும். ஜெயசீலன் கொத்தவேலை செய்துவருகிறார். நான் வாதி யேசுதாசின் 2 வது மனைவியின் சித்தி. ஜெயசீலனின் அப்பாவை நான் பார்த்திருக்கிறேன். வாதி, பிரதிவாதிக்கு வங்கி வழியாக பணம் செலுத்தவில்லை, கையில் ரொக்கமாக கொடுத்தார். பெலிக்ஸ் என்பவரின் வீட்டில் வைத்து பணம் கொடுத்தார். பெலிக்சை எனக்கு தெரியும். பணத்தினை வாங்கியது ஜெயசீலனின் தாயார். பெலிக்ஸ் வீடு தட்டாரவிளையில் உள்ளது. பணம் கொடுக்கும்போது, நான், யேசுதாஸ், ஜெயசீலன் ,மற்றும் அவருடைய அப்பா, அம்மா ஆகியோர் இருந்தனர். பெலிக்ஸ் அப்போது அங்கு இல்லை. வழக்கு சொத்தினை விலைக்கு பேசியபோதும் நான் இருந்தேன். பெலிக்ஸ் வீட்டில் வைத்து தான் விலைக்கு பேசினார்கள். ரூபாய் 1,40,000/- ரொக்கமாக கொடுத்தார்கள் அது 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தார்கள். ஆவணம் கையெழுத்து போட்டபோது பணம் கொடுத்ததாக நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. சொத்தானது விலை பேசப்படும் சமயத்திலும் நான் அங்கு இல்லை என்றால், சரியல்ல. நான் கையொப்பம் போட்ட ஆவணத்தினை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். கிரைய ஒப்பந்த பத்திரத்தில் 6 மாதகாலத்திற்குள் கிரையம்

முடிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால், சரிதான். 6 மாத காலத்திற்குள் கிரையம் எழுதி முடிக்கப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த 6 மாத காலம் ஜெயசீலன் வெளிநாட்டில் இருந்தார். வெளிநாட்டிற்கு செல்ல கடவு சீட்டு வேண்டும். அந்த பாஸ்போட்டை பார்த்தால் அவர் வெளிநாட்டில் இருந்தாரா இல்லையா என்ற விபரம் தெரியும் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படுவது ஜெயசீலனின் பாஸ்போட் என்றால் , சரிதான். அது பி.வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ–1 ஆவணத்தின் அடிப்டையில் ஜெயசீலன் கிரைய ஒப்பந்தம் செய்த 6 மாத காலத்தில் உள்நாட்டில் தான் இருந்ததாக காணப்படுகிறது என்றால், சாட்சி கண்ணாடி போடாமல் என்னால் சொல்லமுடியவில்லை என்கிறார். வழக்கு சொத்தின் ஒருபக்க எல்கை ரோடு என்றால், 7 அடி பாதை. அதில் டெம்போ போகலாம் என்றால், கார் தான் போகமுடியும். சின்ன கார் தான் செல்லமுடியும். அந்த ரோடு அகலமான ரோடு என்றாலும், டெம்போ கூட போகலாம் என்றாலும், நான் தவறுதலாக அவ்வாறு குறிப்பிடுகிறேன் என்றாலும், சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து பேரூராட்ச்சிக்கு உட்பட்டது என்றால், சரிதான். அதில் ஒரு சென்டு சொத்து ரூ.2 லட்சம் மதிப்பு பெறும் என்றால், ரூ.27000–28000 மதிப்பு இருக்கும். வழக்கிற்காக நான் அவ்வாறு மதிப்பை குறைத்து சொல்கிறேன் என்றால், சரியல்ல. நான் குறிப்பிடும் வகையில் பணம் கொடுக்கவோ, ஆவணம் கையொப்பம் செய்யவோ இல்லை என்றால், சரியல்ல. நான் வாதியின் மாமியார் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. பணம் கொடுத்ததாக சொல்லும் நபர்களான ஜெயசீலன், அவரின் அம்மா, அப்பா மற்றும் ஜெயசீலன் மனைவி, ஜெயசீலனின் அக்கா

ஆகியோரும் நானும் வாதியும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றோம். அவ்வாறு நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் அந்த இடத்தில் இருக்கவில்லை என்றாலும், எனக்கு வழக்கு விபரங்கள் மற்றும் வழக்கு சொத்து பற்றிய விபரங்கள் தெரியாது என்றாலும், சரியல்ல. நான் குறிப்பிடுவதுபோல பணம் கொடுக்கல் வாங்கல் எதுவும் நடைபெறவில்லை என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.